மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# சங்க இலக்கியத்தில் பரத்தை – உளவியல் நோக்கு

**இரா. அம்சராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை.
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை

சங்க காலத்தில் போர்கள் அடிக்கடி நிகழ்ந்ததால் ஆடவர் எண்ணிக்கை மகளிரைக் காட்டிலும் குறைந்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண முறை, பல பெண்களுக்கு வாழ வழி வகுக்கவில்லை. எனவே ஆடவர்கள் ஒருத்தியை உலகறிய மணந்தும் ஏனைய மகளிரான காதல் பரத்தை, இல்பரத்தை, சேரிப்பரத்தை, காமக்கிழத்தி என்ற பெயரில் உரிமை மகளிராக்கொண்டும் வாழ்க்கை நடத்தினர். பரத்தையர் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுவதற்கான காரணத்தை அறியமுடிகின்றது. பண்பாட்டு நடத்தைகளில் ஆண், பெண் இருபாலர்க்கும் அளிக்கப்பட்டுள்ள பாலியல் பங்குநிலை மிக முக்கியமானதாகும். ஒரு குடும்பத்தில், சொத்துரிமையுடைய அல்லது பொருளீட்டும் ஆடவனுக்கு பாலுறவு சுதந்திரம் அதிகம். தொல்காப்பியர் காலத்திலிருந்தே அரசியல் தலைவர்கள் அல்லது பெரிய செல்வக் குடும்பத்தலைவர்களுக்கு சமூகவாழ்வில், ஒரு பெண்ணுக்கும் அதிகமாகப் பாலியல் தொடர்பு வைத்துக்கொள்வது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. குடும்பப் பெண் என்பவள், கணவன் எத்தகைய ஒழுக்கக் கேடுள்ளவனானாலும் அவள் கற்பு தவறாமல் இருப்பது வற்புறுத்தப்பட்டது. தமிழ்ப்பண்பாட்டின் சிறப்பே இத்தகைய கற்புடைய மகளிரால் உருவாக்கப்படும் சமூகத்தர நிலைதான் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற ஒருநிலைதான். ஆண் என்பவன் பெண்ணை ஆளக்கூடிய அதிகாரத்தின் வழியில் எப்போதும் தன்னுடைய முதன்மைப்படுத்தும் உளப்பாங்குடனே இருப்பான். பழையகால முடியரசு வாழ்க்கை, பிற்கால ஜமீன்தார் அரசு, பெருநிலக்கிழார்களின் ஆதிக்கம் என்ற பின்னணயில் பெண்களில் ஒருவகையினர் "பரத்தையர்களாக" உருவாக்கப்பட்டுள்ளனர். அப்பரத்தையரின் உளச்சிக்கல்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மனமுறிவு**

மனமானது தான் நினைத்த ஒன்றை அடைய விரும்பும்போது, அதற்கு சூழ்நிலையோ சமூகமோ தடையாக இருக்குமானால் அப்போது, "மனமுறிவு" ஏற்படுகிறது.

"ஓர் அழுத்தமான தேவையும் அதனை எய்தி நிறைவுற இயலாத உணர்வும் உடனியையும்போது நேரும் அனுபவமே உள்ளமுறிவு என்று பிரித்தானியக் கலைக்களஞ்சியம் வரையறைச் செய்துள்ளது.

தலைவிக்கு உரிமையான தலைவனைத் தன் வனப்பால் மயக்கித் தன்னை வந்தடையச் செய்கின்றாள் காதற்பரத்தை. அக்காதற்பரத்தையுடன் மகிழ்ந்திருந்த தலைவன் தன் தலைவியின் இருப்பிடம் நோக்கிச் செல்ல முற்படுகின்றான். இதனால் கவலையுற்ற காதற் பரத்தைக்குத் தலைவன், தலைவி இல்லம் செல்லாது தன்னுடன் இருக்க வேண்டும் என்ற ஆசை இருப்பினும் அவ்வாசை நிறைவேறுவதற்குத் தடையாகத் தலைவி இருக்கின்றாள். இதனால் தன்னாசை நிறைவேறாது மனமிடிந்த காதற்பரத்தை அவனிடம்,"நீ என் முன்கை பற்றிச் சொல்லிய சொற்களைக் கைவிட்டதால் நீ எனக்கு அயலவன் போன்றவன்தான். எனவே நீ, முன்பிருந்த என் அழகு நலனைத் தந்து செல்க என்று கூறுவதனை,

"பனிவார் கண்ணள், பலபுலந்து உறைய,

அருந்திறல் அத்தி ஆடுஅணி நசைஇ

நெடுநீர்க் காவிடு கொண்டுஒளித் தாங்கு நின்,

மனையோள் வல்லலும் அஞ்சுவல்"-(அகம்.,பா.396:12-15)

என்னும் பாடலில் பரத்தை தன் அச்சத்திற்கும் ஆசை நிறைவேறாமைக்கும் காரணம் தலைவனின் மனைவியே எனக்கருதி மனமுறிவு அடைகின்றாள்.

**ஈடுசெய்தல்**

பரத்தையொழுக்கம் புரிந்த தலைவன், அப்பரத்தையை விடுத்துத் தலைவியை நாடுகின்றான். தலைவன் பிரிவால் துன்புற்ற பரத்தை அத்துன்பத்தைத் தாங்கும்பொருட்டு, "தலைவன் என்மீது கொண்ட ஊடல் தீர்ந்து என்னிடம் வரவில்லையாயினும் அவன் மேனி கண்டு பலமுறை மகிழ்ந்துள்ளேன்" என்பதை,

துனிநீர் கூட்டமொடு துன்னார் ஆயினும்

இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல்"(நற்.,பா.216:1-2)

என்ற வரிகளால் உணர்த்துகின்றாள். "ஒன்றைச் சாதிக்க இயலாத சூழலில், ஏமாற்றமும் முறிவும் கவலையும் உற்ற உள்ளம் பிறிதொன்றைச் சாதிக்க முயல்கின்றது. உள்ளத்தின் இவ்வியல்பை உளவியலார் ஈடுசெய்தல் (compensation) என்பர்."தலைவன் தன்னை மகிழ்ந்து பின்பு தலைவியிடம் சென்றான். ஆனாலும் அவன் தன்னிடம் இல்லாத நிலையை. முன்பு தலைவன் நடந்து கொண்ட நடத்தையைப் பின்பு நினைத்து ஈடுசெய்கின்றாள்.

**எதிர்வினை அமைப்பு**

"உளநலத் தற்காப்பு இயங்குமுறைகளில் ஒன்றாகிய எதிர்வினை அமைப்பு (Reaction formation) என்பதை ஏற்க இயலாத உந்துதல்களை அல்லது உணர்ச்சிகளைத்

தன்னியக்கமான நனவிலி மனப்போக்கினால் நேரெதிர்நிலை மனப்பான்மைகள், நடத்தைகள், உணர்ச்சிகளாக மாற்றிக் கொள்ளுதல்'' என வரையறை செய்வர்.

பரத்தை, தலைவி தன்னைப் பழித்தலை அறிகிறாள். தானும் அவளை வெறுத்துப் பழிக்காவிட்டாலும் வளையல்கள் ஒலிக்க அவள் இருக்கும் மனையின் பக்கம் சென்றுவர வேண்டும் என்றும், அதனைக் கண்டு தலைவி மத்தளம் அடிப்பது போல வயிற்றில் அடித்துக் கொள்ளட்டும் என்றும் கூறுகிறாள்.இந்நிகழ்வினை,

''செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதவண்

உலமந்து வருகம் சென்மோ தோழி'.

தண்ணுமைக் கண்ணின் அலைஇயர்தன் வயிறே'' (அகம்.106.7-8,13)

தலைவியை வெறுக்கும், பழிக்கும் பரத்தையின் உள்மனத்துடிப்பு வெறுக்கமாட்டேன் என எதிர்மறையாகி வெளி வருகிறது. தலைவியை வெறுக்க மாட்டேன் எனப் பரத்தை கூறினாலும் வெறுப்பின் மிகுதி அவள் விரும்பும் செயலில் உள்ளது. தலைவியின் முன் வளையோசை கேட்க ஒய்யாரமாய் நடக்கவும், அதனால் அவள் வயிற்றில் அடித்துக்கொள்ள வேண்டுமெனவும் விரும்புகிறாள். வெறுப்பை உள்ளடக்கி மேனியழகையும், நளின நடையையும் மகிழ்வாகக் காட்டிச் சென்று தலைவியைத் தண்டிக்க விழைகிறாள். இந்நிகழ்வானது பரத்தையின் எதிர்வினை நடத்தையை வெளிப்படுத்துகிறது.

**இடம்பெயர்தல்**

''நனவிலி மனத்தின் உந்துதல்களால் முளைவிடும் அச்சுறுத்தலை வேறு ஒரு புறச்சூழல், மனிதர், பொருள், விலங்கு ஆகியவற்றோடு இணைத்து விடுதலே ''இடம்பெயர்தல்'' என்பது உளவியல் வரையறையாகும்.'' இடம் பெயர்த்தல் என்பது ஒருவர் மீதுள்ள கோபம், வெறுப்பு போன்றவற்றை வேறொருவர் மீதோ (அ) உயிரற்ற பொருளின் மீதோ காட்டுதலைக் குறிக்கும். தலைவன் பரத்தையொருத்தியுடன் தொடர்பு கொண்டுள்ளான் என்பதையறிந்த தலைவி பரத்தையைக் கண்டவுடன் அவளது குணங்களைக் கூறிப் பழிக்கின்றாள். அதைக் கேட்ட காதல்பரத்தை, மகப்பேறு பெற்ற தலைவி தன் மகனைப் பேணுதற்கு உரியவளேயன்று தன் போல இன்பத்திற்கு உரியவள் அல்லாள் என்று கூறியதோடு, ''புதல்வனின் தாய்'' என்று அவளின் முதுமையையும், இயலாமையும் கூறிப் பழிக்கின்றாள். மேலும் அவளது சினத்தினைத் தூண்ட, தலைவன் தன்னைப் புகழ்ந்து பேசிய மொழியினை எடுத்துரைக்கின்றாள். மேலும் தலைவியால் இன்பத்தைக் கொடுக்க முடியாததால் அவளிட்ட தொழில்களை உணர்ச்சியற்று செய்வதாகத் தூற்றிப் பேசுகின்றாள். இதை,

''எம்இல் பெருமொழி கூறி தம் இல்

மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே''(குறு.8)

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலும், பரத்தையிடம் சென்று வந்த தலைவனிடம் காமக்கிழத்தி ஊடுகிறாள். தலைவன் அன்பின்றித் துறந்தமையால், தூங்காத எழுகின்ற

முழவோசை வந்து எழுப்பி விடுகிறது. இதனையும் பொறுத்துக்கொள்ள முடிகிறது. ஆனால் தலைவனின் பாணன் வந்து போதலே பெருந்துன்பம் அளிக்கிறது என்கிறாள். இதனை,

"யாழ்தழீஇக் கல்லாவாய்ப் பாணன் புகுதராக் கால்" (கலி.70 : 22-23)

தலைவனின் பிழையொழுக்கத்தையும், அப்பிழையொழுக்கத்தால் துயில் களைதலையும் பொறுத்துக் கொள்பவள் பாணன் வருதலே பெருந்துன்பத்தை ஏற்படுத்துகின்றது என்பது தலைவனிடம் உள்ள வெறுப்பைப் பாணன்மீது இடம்பெயரச் செய்வதை வெளிப்படுத்துகின்றது.

**புறத்தேற்றம்**

"நமது எண்ணங்களை அல்லது ஆசைகளைப் பிறர்மேல் ஏற்றிக் கற்பித்துக் கூறும்போது நாம் புறத்தேற்றம் புரிகின்றோம் என்று வேறுவகையில் பொருளற்றதாக உள்ள சூழல்களுக்கு நம்முடைய ஊக்கங்களுக்கு உரிய முறையில் பொருள் தருவதும் புறத்தேற்றமாகும்" என்று உளவியலார் கூறுகின்றனர். மேலும், "தன்னிடமுள்ள பண்புகளைப் பிறரிடம் காணுகின்ற மனப்பான்மைக்குப் பெயர் புறத்தெழும் அகக் காட்சியாகும் என உளவியலார் விளக்குவர். தலைவனுக்குச் சிற்றின்பத்தை நல்கும் பரத்தை குழந்தைகளைப் பெற்றெடுத்ததாகச் சங்கப் பாடல்களில் குறிப்பு இல்லை என்றாலும்கூட அவளும் பெண் என்பதால், மற்ற கற்புடைய பெண்டிர்க்கு உள்ள ஆசையைப் போலத் தனக்கும் குழந்தைகள் பிறக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவளாக இருப்பாள். பரத்தமையொழுக்கம் பிள்ளைப் பேற்றிற்குக் கேடு என்ற எண்ணம் உள்ளத்தில் உதிப்பதால், தன்னுடைய ஆசையை வெளிப்படக் கூறாமல் உள்ளத்தில் மறைத்துச் சமயம் வரும்போது நயமாகச் சொல்வாள். தலைவனோடு இல்லறவாழ்வு மேற்கொண்ட தலைவிக்குப் புதல்வன் பிறக்கின்றான். மகன் பிறந்த செய்தியை அறிந்த தலைவன் பரத்தையின் இல்லத்திலிருந்து தலைவியின் இல்லம் நோக்கி விரைகின்றான். அப்பொழுது ஈன்றெடுத்த களைப்பில் தலைவியானவள் இமைகள் பொருந்த உறங்க, தன் பரத்தமையொழுக்கம் அவளுக்குத் தெரியாதிருக்கும் பொருட்டுக் கள்வன் போல் இடையாமத்தில் சென்றது போல தன் இல்லத்திற்கும் வருவான் என்பதை,

"நள்ளென் கங்குல், கள்வன் போல,

அகன்துறை ஊரனும் வந்தனன்"(நற்.,பா.40:10-11)

என்னும் நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது. தலைவியிடம் நடந்து கொண்டது போலப் பரத்தையிடமும் அச்சப்பட்டு கள்வனைப் போல் நடந்தனன் என்ற கூற்றில் தலைவியைப் போல் தன்னையும் மதித்தொழுகுகின்றான் என்று பரத்தை கற்பித்துக் கொள்கின்றாள்.

**சரிசெய்தல்**

பிறர்க்குச் செய்த தீமைகளுக்காக மன்னிப்புக் கேட்டல், கழுவாய்க்காகத் தன்னைத் தானே தண்டித்துக் கொள்ளுதல், கழிவிரக்கம், தண்டனைக்கு உட்படுதல் ஆகியவை சரிசெய்தலின் பொதுவான வடிவங்களுள் சில ஆகும்" என்று உளவியலார் இச்செயல்முறையை விளக்குகின்றனர். பரத்தையிடம் இன்பம் நுகர்ந்த தலைவன் காமக்கிழத்தியை அடைகின்றான். தலைவனின் தவறான ஒழுக்க நெறியை அறிந்த

காமக்கிழத்தி, மிகுசினத்துடன் தன்னிடம் வந்த தலைவனிடம் ஊடுகின்றாள். இதனால் மனம் பொறாத தலைவன் தன்னிடம் ஊடியதற்கான காரணத்தை வினவுகிறான். தலைவனின் கூற்றுக்கு மறுமொழியாக காமக்கிழத்தி "தலைவனோ நடுஇரவில் நல்ல மழையில் உன்னோடு இணையும் உணர்வு தோன்ற பரத்தை உன் இல்லக் கதவைத் தட்ட அதைக் கேட்ட நீ தாள் திறந்த பின் கோபத்தால் அவள் உன் கழுத்து மாலையை அறுத்தாளே அப்பொழுது அவளுடைய கோபத்தை நீக்குமாறு,

"தேறுநீ, தீயேன் அலேன், என்று மற்றுஅவள்
சீறடி தோயோ இறுத்தது அமையுமோ?" (கலி.,பா.90:17-18)

என்ற வரிகளில் பரத்தையின் கால்களில் தலைவன் விழுந்ததை உரைக்கின்றாள். தலைவனின் பொய்யுரைகளைக் காமக்கிழத்தி அறிந்து தன்னுடைய அறிவுடைமையால் அவனை நாணமுறச் செய்வதின் வாயிலாக மீண்டும் தலைவன் அத்தவறைச் செய்யாமல் இருப்பான் என்னும் உத்தியைக் கையாளுகின்றாள்.

## தொகுப்புரை

சங்க இலக்கியக்கியப் பாடல்கள் வழியே நோக்குங்கால் தலைவன் பரத்தையை மகிழந்து பிரிகின்றான். அப்பிரிவினைத் தாங்காது அவளது மனமானது உள்ள முறிவு அடைகிறது. தலைவன் தன் நலனை மகிழந்து சென்றாலும் அவன் இல்லாதபொழுது முன்பு அவன் தன்னிடம் நடந்த செயலை என்னி மகிழந்து அதனை ஈடுசெய்து கொள்கின்றாள். தன் மீது பழி சுமத்தும் தலைவிக்கு எதிர்அமைப்பினை உண்டாக்கும் விதமாக வளையல்கள் ஒலிக்க அவள் இருக்கும் மனையினருகில் சென்று அவளது மன உளைச்சளைத் தூண்டுகிறாள். குழந்தை பெற்றவுடன் தலைவியின் அழகு நலனை ஒப்பிட்டுத் தன்னுடைய மேனி அழகைக் கண்டு தலைவன் என்னிடமே வருவான் என்று கூறுகின்றாள். மேலும். தூங்காது எழுகின்ற முழவோசை பொறுத்துக்கொள்ளும் பரத்தைக்குப் பாணன் வருதலே பெருந்துன்பம் என்று இடம்பெயர்த்துகின்றாள். தலைவன் மகன் பிறந்த செய்தியை அறிந்து வீட்டிற்கு கள்வன் போல சென்ற தலைவன் தன் இல்லத்திற்கும் வருவான் என்று புறத்தேற்றம் புரிகின்றாள். மேலும், தலைவனின் தவற்றைக் கண்ட பரத்தை சரிசெய்தல் என்னும் உத்தியால் கையாளுகின்றாள். மேற்கண்ட விளக்கங்கள் வாயிலாக பரத்தைக்கு உளப்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்பதை உய்த்துணர முடிகிறது.

## குறிப்புகள்

1. து. சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல், ப.1.
2. மு. இராசமாணிக்கம், உளவியல் துறைகள், இரண்டாம் தொகுதி, ப.336.
3. து. சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல், ப.190.
4. மேலது, ப.205.
5. மு. இராசமாணிக்கம், உளவியல் துறைகள் - இரண்டாம் தொகுதி, ப.341.
6. து. சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல், ப.240.